**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OP | 39 | of | 2024 |
|---|---|---|---|---|

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| பெயர் | கீர்த்தனா தேவி | தந்தை பெயர் | |
|---|---|---|---|
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

**நாள்-25.10.2025**

**ம.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

நான் B.Sc., படித்திருக்கிறேன். நான் accenture solution pvt. Ltd என்ற நிறுவனத்தில் team leader ஆக பணிபுரிகிறேன். என்னுடைய மாத சம்பளம் ரூ.75 ஆயிரம். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் நடந்த திருமணம் காதல் திருமணம் ஆகும். இரு குடும்பத்தாரின் சம்மதத்தின் பேரில் எங்கள் திருமணம் நடந்தது. திருமணம் ஆகி 7 வருடங்கள் வரை மகிழ்ச்சியாக சென்றது. திருமணத்திற்கு முன்பே நான் வேலைக்கு செய்து கொண்டிருந்தேன். என் கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் நான் வேலைக்கு செல்ல வேண்டும் என்றுதான் சொன்னார்கள். என் பெற்றோர் வீடு

ராசிபுரம் ஆகும். எனவே என் பெற்றோர் வீட்டுக்கு அடிக்கடி செல்ல வாய்ப்பில்லை. கொரானா சமயத்தில் எனக்கும் என் கணவருக்கும் இடையில் பிரச்சனை அதிகமாகி விட்டது. என் கணவர் என்னை வீட்டில் இருந்து வெளியே போக சொன்னதால் என் பெற்றோர் வீட்டிற்கு ராசிபுரத்திற்கு என்னை குழந்தையுடன் அழைத்து சென்றார்கள். எதிர்மனுதாரர் என்னுடன் வேலை பார்ப்பவரை இணைத்து அவதூறாக பேசியதால் பிரிவினை ஏற்பட்டது. குழந்தை எதிர்மனுதாரர் வசம் கடந்த 2 ஆண்டுகள் 5 மாதமாக இருந்து வருகிறது. நான் பிரிந்து சென்ற பிறகு குழந்தையை பார்க்க பல முயற்சிகள் மேற்கொண்டேன். ஆனால் எதிர்மனுதாரர் குழந்தையை என்னிடம் காட்டவில்லை. நான் முடிச்சூரில் உள்ள என் கணவர் மற்றும் அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றபோது குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை. நான் தற்போது காரப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியாக womens PG ல் இருந்து வருகிறேன். எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவு படி குழந்தையை என்னிடம் காட்டியுள்ளார். எதிர்மனுதாரர் வசம் இரண்டரை ஆண்டுகளாக உள்ளதால் குழந்தை அவரிடம் இருக்கதான் விரும்புகிறது. அவ்வாறு குழந்தையை மாற்றியுள்ளார்கள். எதிர்மனுதாரர் ரூ.11 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்து நான் என் பெயருக்கு flat வாங்கினேன் என்றால் அது எதிர்மனுதாரருக்கு நான் கொடுத்த கடன் தொகையை அவர் திருப்பி கொடுத்தாகும். 2022 ல் நான் flat வாங்கினேன். நான் குழந்தையை பராமரிப்பிற்காக 4 மாதங்கள் ரூ.25 ஆயிரம் வீதம் எதிர்மனுதாரரிடம் கொடுத்தேன். அதன்பிறகு எனக்கு குழந்தையை காட்ட மறுத்ததால்

தொகை எதுவும் கொடுக்கவில்லை. குழந்தைக்கு பொன்மகள் திட்டம், stem cells deposit ஆகியவற்றில் தொகை செலுத்தியிருக்கிறேன். மேலும் என் பெயரில் உள்ள flat க்கு beneficiary ஆக home loan ல் காட்டியிருக்கிறேன்.

வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu